# அறுவடை ஆகும் கடைபோக உருளைக்கிழங்கை உடனே விற்கவும்

**முனைவர். க.ச. பிரகாஷ் மற்றும் முனைவர். ந.அஜ்ஜன்**

**தேசிய வேளாண் புதுமைத்திட்டம்-உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்**
**வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**கோயம்புத்தூர்- 641 003**

உருளைக்கிழங்கு ‘காய்கறிகளின்’ அரசன் என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் அது முக்கியமான உணவுப்பொருள்களில் ஒன்றாகும். உருளைக்கிழங்கு பரவலாக 150க்கும் மேற்பட்ட நாடுகளில் பயிரிடப்படுகிறது. சீனா, ரஷ்யா, இந்தியா, உக்ரைன், போலந்து, ஜெர்மனி, பெலாருஸ், பிரான்ஸ் மற்றும் நெதர்லாந்து ஆகியன உலகில் முதல் 10 இடங்களை வகிக்கின்றன. உலகின் மொத்த உற்பத்தியில் மேற்கண்ட நாடுகள் 70 சதவீதத்திற்கும் அதிகமாகப் பங்களிக்கின்றன.

இந்தியாவில் உருளைக்கிழங்கு 2012-13ல் 19.65 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 447 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியாவின் மொத்த உருளைக்கிழங்கின் பரப்பு மற்றும் உற்பத்தியில் உத்திரப்பிரதேசம், மேற்குவங்காளம், பீகார், அசாம், மத்திய பிரதேசம், பஞ்சாப் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் முறையே 85 சதவீதம் மற்றும் 89 சதவீதம் பங்களிக்கின்றன. இந்தியாவிலிருந்து 2012-13ல் 11.14 இலட்சம் டன்கள் உருளைக்கிழங்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 13 சதவீதம் அதிகமாகும். தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் கணக்கீட்டின்படி, 2012-13ல் தமிழ்நாட்டில் உருளைக்கிழங்கு 4,860 எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு 97,200 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டன. கடந்த ஆண்டைக் (2011-2012) காட்டிலும் பரப்பு மற்றும் உற்பத்தி முறையே 1 சதவீதம் மற்றும் 7 சதவீதம் இந்த ஆண்டு குறைந்து உள்ளது.

தமிழ்நாட்டில் திண்டுக்கல், நீலகிரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களின் மலைப்பாங்கான இடங்களில் உருளைக்கிழங்கு பயிரிடப்படுகிறது. கடைபோக உருளைக்கிழங்கு செப்டம்பர் முதல் அக்டோபர் வரை விதைப்பு செய்து டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத்தில் அறுவடை

செய்யப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் குப்ரி ஜோதி மற்றும் குப்ரி கிரிராஜ் இரகங்கள் பயிரிடப்படுகின்றன. நீலகிரி மாவட்ட விவசாயிகள் தற்போது அறுவடை ஆகி வரும் கடைபோக உருளைக்கிழங்கின் விற்பனை முடிவுகளை எடுப்பதற்கு ஆர்வமாக உள்ளனர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண்மைப் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் (சூஊஆளு) கடந்த 15 வருடங்களாக நிலவிய உருளைக்கிழங்கு விலைகளை ஆய்வு செய்தது. அதன்படி கடைபோக உருளைக்கிழங்கு அறுவடையின் போது டிசம்பர் மற்றும் ஜனவரியில் கிலோவிற்கு ரூ.20 முதல் 24 வரை கிடைக்கும் என கணக்கிடப்படுள்ளது. ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் அதிகரித்தால் மட்டுமே கிலோவிற்கு ரூ.5 முதல் 7 வரை உயர வாய்ப்புள்ளது. ஆதலின் அறுவடை ஆகும் உருளைக்கிழங்கினை உடனே விற்பனை செய்யுமாறு விவசாயிகள் பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள -**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003,
தொலைபேசி- 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் -**

**முனைவர்.என். செல்வராஜ்**
பேராசிரியர் மற்றும் தலைவர்
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்
விஜயநகரம்,
உதகமண்டலம்-643001.
தொலைபேசி 0423-2442170
கைப்பேசி 94430 52219.